# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 17 /பேரூ/2024**

**நாள் : 25.02.2025**

திரு. இரா. பெரியசாமி,
அரும்பாவூர்,
பெரம்பலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம். – எதிர் மனுதாரர்

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர், பண்ணையார் தெரு (வடக்கு) கதவு எண்.13/1 என்ற முகவரியை சேர்ந்த தமிழ்நாடு பேரூராட்சி ஓய்வு பெற்ற அலுவலர்கள் நலன் சங்க மாநில செயலாளர் திரு. இரா. பெரியசாமி என்பவரின் 12.04.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.04.2024 அன்று பெறப்பட்டு, 17/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர், பண்ணையார் தெரு (வடக்கு) கதவு எண்.13/1 என்ற முகவரியை சேர்ந்த தமிழ்நாடு பேரூராட்சி ஓய்வு பெற்ற அலுவலர்கள் நலன் சங்க மாநில செயலாளர் திரு. இரா. பெரியசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியில் திருமதி. N. லதா என்பவர் 08.03.2019 முதல் 14.07.2021 வரையிலும் மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலங்களில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் கீழ்க்காணும் தலைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினம் மேற்கொண்டதில், தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியும், உள்ளாட்சி பிரதிநிதிகள் இல்லாத நிலையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் எவ்வித முன் அனுமதியும், மேலொப்பமும் பெறாமல் செலவினங்கள் மேற்கொண்டதாக குறிப்பிட்டு போலி பட்டியல்கள் மூலம் தொகையினை மோசடி செய்து எடுத்துள்ளார்.

| வ.எண். | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 01. | பொது சுகாதாரம் தலைப்பில் செலவினம் | 21,49,263.00 |
| 02. | தனியார் டிராக்டர் மூலம் குப்பைகள் அகற்றுதல் | 3,91,559.00 |
| 03. | டீசல் கொள்முதல் | 23,46,048.00 |
| 04. | JCB மூலம் செலவினம் | 16,42,039.00 |
| 05. | மகளிர் குழு மூலம் செலவினம் | 26,69,995.00 |
| 06. | மரக்கன்றுகள் கொள்முதல் | 1,75,705.00 |
| 07. | வாகனம் பராமரிப்பு செலவினம் | 1,58,338.00 |
| 08. | நிதி மாற்றம் | 50,00,000.00 |
| 09. | விளம்பரம் குறித்த செலவினம் | 1,40,140.00 |
| 10. | விளம்பரம் வாசகங்கள் எழுதுதல் | 3,43,809.00 |
| 11. | சில்லரை செலவினம் | 16,24,362.00 |
| 12. | கொரோனா செலவினம் | 15,11,589.00 |
| 13. | மின் உதிரிப் பொருட்கள் கொள்முதல் | 12,90,146.00 |
| 14. | குடிநீர் பொருட்கள் கொள்முதல் | 62,42,742.00 |
| 15. | குடிநீர் வினியோகம் செய்ததாக செலவினம் | 1,53,831.00 |
| 16. | கணினி பராமரிப்பு செலவினம் | 1,82,205.00 |
| 17. | விளம்பரம் செலவினம் | 2,22,070.00 |
| 18. | ஜெராக்ஸ் செலவினம் | 1,69,577.00 |
| | கூடுதல் | 2,64,13,418.00 |

மேற்காணும் செலவினங்கள் மேற்கொண்டதாக போலி பட்டியல்கள் மூலம் அரசு நிதியை கையாடல் செய்த திருமதி. N. லதா செயல் அலுவலர் என்பவர் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியும், இத்தொகையை திரும்பவும் சம்பந்தப்பட்டவரிடமிருந்து வசூலித்து அரசு நிதியில் சேர்த்திட வேண்டுமாய் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் புயல், மழை காரணமாக பழுதடைந்த மின்மோட்டார்களை ஒப்பந்தப் புள்ளி கோரினால் காலதாமதாகும் என்பதால் உதவி இயக்குநர் அவர்களின் அறிவுரையின் பேரில் ஒப்பந்தப் புள்ளி பெற்று பராமரிப்பு செய்து, பொதுமக்களுக்கு தேவையான குடிநீரை வழங்கிய செயல் அலுவலர் மீது குற்றச்சாட்டு குறிப்பாணை 17ஆ மூலம் நடவடிக்கை எடுத்து கடந்த 10 வருடங்களாக நிலுவையில் விசாரணை நடைபெறாமல் உள்ளது.

ஆனால் பேரூராட்சிகளின் இயக்குநரக அலுவலகத்தில் அதிகார மையமாக செயல்பட்டு வரும் திருமதி. N. லதா என்பவர் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.07.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 04.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

மனுதாரர் திரு. ஆர். பெரியசாமி என்பவரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட திருக்கழுக்குன்றம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திருமதி. நா. லதா என்பவர் தற்போது காஞ்சிபுரம் மண்டலம் (காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கு) உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறார். பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு உயர் பதவியான காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்

பணியிடமான மேற்படி அலுவலர் மீது திருக்கழுக்குன்றம் தேர்வு நிலை பேரூராட்சியில் புகார்தாரர் திரு. ஆர். பெரியசாமி அளித்த புகார் தொடர்பாக சென்னை, பேரூராட்சிகளின் இயக்கக ஆய்வு அலுவலர் திருக்கழுக்குன்றம் தேர்வு நிலை பேரூராட்சியில் 21, 22 மற்றும் 23.10.2024 ஆகிய நாட்களில் மேற்படி அலுவலர் பணிபுரிந்த காலத்தில் செலவிடப்பட்ட செலவின பட்டியல் மற்றும் பதிவேடுகள் பார்வையிடப்பட்டு உரிய ஆய்வுகள் மேற்கொள்ள பதிவேடுகள், செலவினப்பட்டியல் சென்னை, பேரூராட்சிகளின் இயக்ககத்தில் 25.10.2024 அன்று ஆய்வு அலுவலர் (Cell Officer) அவர்களிடம் நேரில் ஒப்படைக்கப்பட்டது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் திருக்கழுக்குன்றம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. இரா. பெரியசாமி என்பவர் தனது 12.04.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருக்கழுக்குன்றம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவர் 08.03.2019 முதல் 14.07.2021 மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் பேரூராட்சியில் மொத்தம் 18 இனங்களில் மேற்கொண்ட மொத்தம் செலவினமான ரூ.2.64 கோடி தொகையினை போலியான பட்டியல்கள் மூலம் அரசு நிதி கையாடல் செய்திருப்பதாக புகார் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் திரு. இரா. பெரியசாமி அளித்த புகார் மனு தொடர்பாக சென்னை பேரூராட்சிகளின் இயக்கக ஆய்வு அலுவலர் (Cell Officer) திருக்கழுக்குன்றம் தேர்வுநிலை பேரூராட்சியில் 21.10.2024 முதல் 23.10.2024 வரையுள்ள 3 நாட்களில் புகாருக்குள்ளான செயல் அலுவலர் பணிபுரிந்த காலத்தில் செலவிடப்பட்ட செலவின பட்டியல்கள் மற்றும் பதிவேடுகள் பார்வையிடப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது. மேலும், இது தொடர்பாக உரிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் 25.10.2024 அன்று சென்னை, பேரூராட்சிகளின் இயக்கக ஆய்வு அலுவலரிடம் நேரில் ஒப்படைக்கப்பட்டுள்ளதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் அறிய வருகிறது.

எனவே, திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி. N. லதா என்பவரால் 08.03.2019 முதல் 14.07.2021 மற்றும் 20.07.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் மொத்தம் ரூ.2.64 கோடி முறைகேடாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்கிற புகார் குறித்து, விரைவான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்கக ஆய்வு அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பேரூராட்சிகளின் இயக்குநர் தக்க துரித நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்.

2025ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 25ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. பெரியசாமி,
தமிழ்நாடு பேரூராட்சி ஓய்வு பெற்ற அலுவலர்கள் நலன் சங்கம்,
13/1, பண்ணையார் தெரு (வடக்கு),
அரும்பாவூர் - 621103, பெரம்பலூர் மாவட்டம்.

2) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

3) ஆய்வு அலுவலர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

4) செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

5) இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 600 028

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (மு.கூ.பொ.)